நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னூர்.

**முன்னிலை: – திருமதி. R. கீதா. பி.ஏ, பி.எல்.**
**நீதித்துறை நடுவர்,**
**விரைவு நீதிமன்றம், குன்னூர்.**
**(FAC) நீதித்துறை நடுவர், குன்னூர்.**

2026 - ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 – ஆம் நாள் வெள்ளிக்கிழமை
(திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ பராபவ வருடம் ஆடி மாதம் 15 – ஆம் நாள்)

**சுருக்கு விசாரணை வழக்கு எண்.453/2026**
**CNR.No.TNNS050014762026**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | - | அரசுதரப்பில் காவல் உதவி ஆய்வாளர்,<br>குன்னூர் நகர் காவல்நிலையம்,<br>**குற்ற எண்.54/2026.** |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | – | A1 – சரவ'ணகுமார், (வயது – 49),<br>த/பெ. தருமன்,<br>க.எண். 53, பழைய மருத்துவமனை லைன்,<br>குன்னூர்.<br><br>A2 – தமிழரசன், (வயது – 33),<br>த/பெ. ராமகிருஷ்ணன்,<br>க.எண்.473, இந்திரா நகர்,<br>காந்திபுரம், குன்னூர். |
| வனையப்பட்ட குற்றம் | – | A1 & A2 - U/s. 287 of BNS. |
| தண்டிக்கப்பட்ட குற்றம் | – | இல்லை. |
| குற்றம் நிகழ்ந்த நாள் | – | 06.04.2026 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | – | 06.04.2026 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | – | -- |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | – | -- |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப் பட்ட நாள் | – | 22.05.2026 |
| பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.263–இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப் பட்ட நாள் | – | 06.06.2026 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | – | முதல்விசாரணை / குறுக்குவிசாரணை:<br>Pw.1 – 17.06.2026 / 17.06.2026<br>Pw.2 – 13.07.2026 / 13.07.2026 |

Tmt. R. Geetha, B.A.,B.L.,
Digitally signed by Tmt. R. Geetha, B.A.,B.L., Date: 2026.07.31 18:44:35 +0400

| | | |
|---|---|---|
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | – | 13.07.2026 |
| பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.348–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | – | -Nil- |
| பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.351(1)(ஆ)-இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 21.07.2026 |
| தலைமறைவு எதிரி குறித்த விவரம் | – | -Nil- |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | – | -Nil- |
| தீர்மானம் | – | 1, 2 எதிரிகள் மீதான சட்டப்பிரிவு.287 of BNS – இன் கீழான குற்றத்திற்கு எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானிக்கப் படுகிறது. |
| முடிவு | – | **இறுதியாக,** 1, 2 எதிரிகள் மீதான சட்டப்பிரிவு. 287 of BNS – இன் கீழான குற்றம் அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிருபிக்கப் படவில்லை என்பதால் எதிரிகள் மேற்படியான குற்றங்களுக்கு குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து பி.என்.எஸ்.எஸ்பிரிவு 278(2)–இன் கீழ் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை.<br><br>எதிரிகள் ஏற்கனவே பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத் திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல் முறையீடு செய்யவில்லையெனில் எதிரி யின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப் படுகிறது. |

இவ்வழக்கு 22.05.2026 - ஆம் தேதியன்று சட்டப்பிரிவு. 287 of BNS – இன் கீழ் இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதியாக 21.07.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–I திரு. பட்டுராஜா, அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. மனோஜ்குமார், அவர்கள் ஆஜராகியும் இதுநாள் வரை விசாரணை செய்தும் இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

Tmt. R. Geetha, B.A.,B.L.,
Digitally signed by Tmt. R. Geetha, B.A.,B.L., Date: 2026.07.31 18:44:40 +0400

## <u>தீர்ப்புரை</u>

**<u>1. குன்னூர் நகர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் பி.என்.எஸ்.எஸ். பிரிவு.193-இன் கீழ் எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற அறிக்கையின் விவரம் :–</u>**

கடந்த 29.03.2026 - ஆம் தேதி பகல் 13.30 மணிக்கு குன்னூர் நகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட குன்னூர் மவுண்ட்ரோடு டாக்சி ஸ்டேண்டு அருகில் 1 – ஆம் எதிரியின் ஏற்பாட்டில் 2 – ஆம் எதிரி பொது இடத்தில் வைத்து எந்தவித முன்னனுமதியும் பெறாமல் எளிதில் தீ பற்றக்கூடிய அபாயகரமான பட்டாசை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் தீப்பற்ற வைத்துக்கொண்டு பொது மக்களுக்கு இடையூறு செய்யும் விதமாய் தொல்லை கொடுத்துக்கொண்டு பட்டாசு வெடித்து கொண்டிருந்த குற்றத்திற்காக 1, 2 எதிரிகள் சட்டப்பிரிவு 287 of BNS - இன் கீழ் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக குன்னூர் நகர் காவல்நிலைய காவல் உதவி ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** 1, 2 எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி நீதிமன்றத்தில் ஆஜரானபின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.230 வலியுறுத்துவது போல இலவசமாக எதிரிகளுக்கு வழங்கப்பட்டு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, எதிரிகள் மீதான பிரிவு 287 of BNS –இன் கீழான குற்றம் குறித்து விளக்கி கூறி வினவிய போதும் எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3.** அரசு தரப்பில் **அ.சா.1** மற்றும் **அ.சா.2** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1** மற்றும் **அ.சா.ஆ.2** சான்றாவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை.

**<u>4. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக புலப்படும் வழக்கின் சுருக்கம் :–</u>**

Tmt. R. Geetha, B.A.,B.L., Digitally signed by Tmt. R. Geetha, B.A.,B.L., Date: 2026.07.31 18:44:46 +0400

(i) **அ.சா.2** திரு. பாஸ்கரன், உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், இவ்வழக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் திருமதி. சரோனியா அவர்கள் உதகை மாவட்ட சிங்கப்பெண் அதிரடி படைக்கு பணிமாறுதல் அடைந்து சென்றுவிட்டதால் நான் இவ்வழக்கில் ஆவணங்களை பார்த்து அவருக்காக சாட்சியமளிப்பதாகவும், கடந்த 29.03.2026 – ஆம் தேதி உதவி ஆய்வாளர் திருமதி. சரோனியா அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.54/2026, சட்டப்பிரிவு.287 of BNS – இன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், பின்னிட்டு முதல் தகவல் அறிக்கையுடன் புகாரையும் இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், இதர நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை அவரது புலன் விசாரணைக்கு அன்றையதினமே எடுத்துக்கொணடு சம்பவஇடத்திற்கு சென்று சாட்சிகள் ரெவீன்குமார் கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் அப்துல் மஜித், முருகன், ராஜேஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னிட்டு எதிரிகளுக்கு பிரிவு 35(3) இன் கீழ் அறிவிப்பு அனுப்பி விசாரணை மேற்கொண்டதாகவும், பின்னிட்டு சம்பவம் உண்மையென தெரியவந்ததால் 13.05.2026 – ஆம் தேதி எதிரிகள் மீது சட்டப்பிரிவு. 287 of BNS – இன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**5.** அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்குப் பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து எதிரிகளிடம் பி.என்.எஸ்.எஸ்.பிரிவு.351(1)(ஆ) பிரிவின் படி விசாரணை செய்த போது எதிரிகள் குற்றத்தை மறுத்தார். மேலும் எதிரி தரப்பில் வாய் மொழி சாட்சியம் மற்றும் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனவே எதிரி தரப்பில் சாட்சியங்கள் எதுவும் இல்லை.

**6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் எதிரி மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.**


Digitally signed by Tmt. R. Geetha, B.A.,B.L., Date: 2026.07.31 18:44:51 +0400

<u>**பிரச்சனை**</u> :–

கடந்த 29.03.2026 - ஆம் தேதி பகல் 13.30 மணிக்கு குன்னூர் நகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட குன்னூர் மவுண்ட்ரோடு டாக்சி ஸ்டேண்டு அருகில் 1 – ஆம் எதிரியின் ஏற்பாட்டில் 2 – ஆம் எதிரி பொது இடத்தில் வைத்து எந்தவித முன்னனுமதியும் பெறாமல் எளிதில் தீ பற்றக்கூடிய அபாயகரமான பட்டாசை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் தீப்பற்ற வைத்துக்கொண்டு பொது மக்களுக்கு இடையூறு செய்யும் விதமாய் தொல்லை கொடுத்துக்கொண்டு பட்டாசு வெடித்து கொண்டிருந்த குற்றத்திற்காக 1, 2 எதிரிகள் சட்டப்பிரிவு 287 of BNS - இன் கீழ் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக குன்னூர் நகர் காவல்நிலைய காவல் உதவி ஆய்வாளரால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>7. தீர்வு</u>:-

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. சாட்சிகள் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

8. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது **அ.சா.**1 மற்றும் **அ.சா.**2 சாட்சியங்கள் மூலமாகவும், **அ.சா.ஆ.**1 மற்றும் **அ.சா.ஆ.2** சான்றாவணங்களின் மூலமாகவும் அரசு தரப்பு வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும், எனவே எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று கூறி வாதிட்டார்.

9. கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தமது வாதத்தின் போது, புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்வழக்கு என்றும், எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் கூறி வாதிட்டார்.

10. 1, 2 எதிரிகள் 29.03.2026 – ஆம் தேதியன்று மதியம் சுமார் 13.30 மணியளவில் சுமார் குன்னூர் மவுண்ட் ரோட்டில் டாக்சி ஸ்டேண்டு அருகில் எந்தவித முன்னனுமதியும் இன்றி எளிதில் தீப்பற்றக்கூடிய அபாயகரமான பட்டாசுகளை

Tmt. R. Geetha, B.A.,B.L., Digitally signed by Tmt. R. Geetha, B.A.,B.L., Date: 2026.07.31 18:44:58 +0400

அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் தீப்பற்றவைத்துக் கொண்டு பொதுமக்களுக்கு இடையூறு செய்து குற்றம் புரிந்ததாக கூறி எதிரிகள் மீது சட்டப்பிரிவு. 87 of BNS – இன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது தெரியவருகிறது.

**11.** மேற்படி குற்றச்சாட்டு குறித்து அ.சா.1 – இன் புகாரையும் அவரது சாட்சியத்தையும் பரிசீலனை செய்கையில், இவ்வழக்கின் எதிரிகள் பட்டாசு வெடித்துக் கொண்டிருந்ததை தான் நேரடியாக பார்த்தாக குறிப்பிட்டு கூறவில்லை என்பது தெரியவருகிறது. அ.சா.1 அவரது சாட்சியத்தில், தான் ரோந்து அலுவலில் இருந்தபோது குன்னூர் மவுண்ட் ரோட்டில் டாக்சி ஸ்டேண்டு அருகில் பட்டாசு வெடித்துக் கொண்டிருந்தார்கள் என்றும், அவர்களில் ஆஜர் எதிரிகளும் இருந்தார்கள் என்று மட்டுமே கூறி சாட்சியமளித்துள்ளது தெரியவருகிறது. மேலும் எதிரிகள் வெடித்ததாக கூறப்படும் பட்டாசுகளில் எஞ்சிய பொருட்களை கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் உரிய வழிமுறையில் தாக்கல் செய்து அந்த பட்டாசுகள் மனித உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய பட்டாசுகள் தான் என்பதை அரசு தரப்பு நிரூபணம் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும் தெரியவருகிறது.

**12.** மேலும் எதிரிகள் பட்டாசு வெடித்ததாக கூறப்படும் இடம் பற்றி அறிந்து கொள்வதற்கும் அந்த இடத்தில் பட்டாசு வெடிக்கும் பட்சத்தில் அங்கு உள்ள கடைகள் மற்றும் மனிதர்களுக்கு ஆபத்து ஏற்படும் என்பதை காண்பிக்க இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் போன்றவற்றை தயார் செய்து தாக்கல் செய்யவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 – ஐ தவிர மற்ற கண்ணுற்ற சாட்சிகளாக புலன் விசாரணை அதிகாரி அவரது குற்ற இறுதியறிக்கையில் கூறிய முருகன் மற்றும் ராஜேஷ்குமார் ஆகியோர்களை சாட்சிகளாக விசாரணை செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும் தெரியவருகிறது. எனவே எதிரிகள் எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை கவனமின்றி கையாண்டு மனித உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் பொதுஇடத்தில் நடந்து கொண்டுள்ளார்கள் என்பதை அரசு தரப்பு தகுந்த சாட்சிய சாண்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் முடிவு

Tmt. R. Geetha, B.A.,B.L., Digitally signed by Tmt. R. Geetha, B.A.,B.L., Date: 2026.07.31 18:45:04 +0400

செய்கின்றது.

**13.** மேற்கண்ட ஆய்விலிருந்து அரசு தரப்பானது எதிரிகள் மீதான பிரிவு. 287 of BNS - இன் படியான குற்றத்தினை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரிகள் மேற்கண்ட குற்றத்தின் படி குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**14. முடிவு:–**

**இறுதியாக,** 1, 2 எதிரிகள் மீதான சட்டப்பிரிவு. 287 of BNS – இன் கீழான குற்றம் அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை என்பதால் எதிரிகள் மேற்படியான குற்றங்களுக்கு குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து பி.என்.எஸ்.எஸ். பிரிவு 278(2)–இன் கீழ் தீர்ப்பளிக்கிறது.

**15.** இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை.

எதிரிகள் ஏற்கனவே பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் வடிக்கப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 - ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31 -ஆம் நாள் வெள்ளிக்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்டது.

Tmt. R. Geetha, B.A.,B.L.,
Digitally signed by Tmt. R. Geetha, B.A.,B.L., Date: 2026.07.31 18:45:12 +0400

*(FAC)* நீதித்துறை நடுவர்,
குன்னூர்.

**பின்சேர்க்கை :-**

**அரசு தரப்பு சாட்சிகள் :-**

| Persecution Witnesses No. | Name of the Witnesses | Description |
|---|---|---|
| PW.1 | திரு. ரவீன்குமார், குன்னூர் கிராம நிர்வாக அலுவலர். | புகார்தாரர். |
| PW.2 | திரு. பாஸ்கரன், உதவி ஆய்வாளர், குன்னூர் நகர காவல் நிலையம். | புலன் விசாரணை அதிகாரி. |

**அரசுதரப்பு சான்றாவணங்கள் :-**

| *Exhibits No.* | *Date* | *Description of Exhibits* | *Proved by/ Attested by* |
|---|---|---|---|
| Ex.P.1 | 29.03.2026 | புகார் மனு. | அ.சா.1. |
| Ex.P.2 | 29.03.2026 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.2. |

**அரசுதரப்பு சான்றுபொருள் :-**
இல்லை.

**எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்** :-
இல்லை.

**குறிப்பு:-**

1) விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்துள்ளார்.

2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை.

3) வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

Tmt. R. Geetha, B.A.,B.L.,
Digitally signed by Tmt. R. Geetha, B.A.,B.L.,
Date: 2026.07.31 18:45:18 +0400
*(FAC)* நீதித்துறை நடுவர்,
குன்னூர்.